(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

(03) வாழ்க்கைப் பருவங்கள் காலத்துக்கு காலம் மாறுபடக்கூடிய தொன்றாகும்.

01. பிள்ளைப் பருவத்துக்கு பின்னரான பருவங்களை தருக?

02. கட்டிளமைப்பருவத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் 3 தருக?

03. முதுமைப் பருவத்தினரின் பிரச்சனைகளை குறைந்துகொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 4 தருக?

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

(04) விளையாட்டு செயற்பாடு என்பது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக இன்று காணப்படுகிறது.

01. மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் 5 பெரும் பிரிவுகளும் எவை?

02. நீளம் பாய்தலின் நுட்பமுறைகள் தருக?

03. விளையாட்டு விதிமுறைகளின் முக்கியத்துவம் நான்கு தருக?

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

பகுதி II

(05) எமது அன்றாட வாழ்க்கை முறையில் உயிரியற் பொறிமுறைக் கோட்பாடு மிக முக்கியமானதொன்றாகும்.

01. கொண்ணிலையில் செல்வாக்கு செலுத்தும் உயிரியற் பொறிமுறை விஞ்ஞான கோட்பாடுகளை தருக?

02. சடத்துவம் என்றால் என்ன என்பதை தக்க சான்றுகளுடன் விளக்குக?

03. பாயும் உயரத்தில் தூரத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை தருக?

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

(06) ஆரோக்கியமான வாழ்க்கைக்கு போசனை என்பது இன்றியமையாத ஒன்றாகும்.

01. சீரற்ற போசனை முறையல் ஏற்படும் குறைபாடுகளை மூன்று தருக?

02. நுண் ஊட்டக் குறைபாடுகளை மூன்று தருக?

03. தனிநபர் தேவைக்கேற்ப உணவு தயாரிக்க வேண்டியோர் யாவர்?

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)


www.ikeou.lk

(07) அதிக செலவின்றி குறைந்த இடப்பரப்பில் விளையாடக்கூடிய ஒரு விளையாட்டு வொலிபோல் ஆகும்

01. நீர் சிரேஷ்ட அணியின் தலைவர் என்ற வகையில் உமக்கு இடைநிலை பிரிவினருக்கு பயிற்றுவிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. நீர் அவர்களுக்கு பயிற்றுசிக்கும் இரண்டு பணித்தல் (Service) முறைகளை தருக?

02. உங்களது இல்லத்தின் புதிய வொலிபோல் விளையாட்டு வீரர்களுக்கு அறைதல் திறனை மேம்படுத்துவதற்கான செயல்பாடுகள் இரட்டை வரி படத்தின் மூலம் விளக்குக?

03. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியின் போது மத்தியஸ்தர்களால் பயன்படுத்தும் சமிக்ஞைகள் வழங்கக் காரணமான சந்தர்ப்பம் விளக்குக



A



B



C



D

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

www.ikeu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

முதலாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் : 11	பாடம் : குடியியற் கல்வி	நேரம் :- 3.00 மணித்தியாலம்

பெயர் / சுட்டெண் :.....

பகுதி I

❖ **01 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) கிரேக்க நகராட்சி அரசின் பிரதான ஆட்சி நிறுவனம்.
1. நிர்வாகக் கழகம் 2. செனட்சபை 3. மக்கள் மன்றம் 4. பிரதிநிதிகள் சபை

02) தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் மக்கள் அனைவரும் பங்கு கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் ஆட்சிமுறை எது?
1. நேரடி ஜனநாயக ஆட்சிமுறை 2. பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சிமுறை
3. சர்வாதிகார ஆட்சி 4. சோசலிச ஆட்சி முறை

03) பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தாயகமாகக் கருதப்படும் நாடு எது?
1. கிரேக்கம் 2. அமெரிக்கா 3. ஸ்பெயின் 4. பிரித்தானியா

04) "ஜனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளும் ஆட்சிமுறையாகும்." எனக் கூறியவர்.
1. மாக்கியாவல்லி 2. ஆபிரகாம் லிங்கன் 3. சீலர் 4. பைனர்

05) கி.மு 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆரியக் குடியேற்றத்தில் குழுவாட்சி காணப்பட்ட இடம்.
1. காஷ்மீர் 2. எதென்ஸ் 3. வஜ்ஜி 4. கல்கத்தா

06) ஜனநாயக ஆட்சிமுறையைக் கொண்ட ஒரு நாட்டில் ஆட்சி செய்வதற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது.
1. சர்வசன வாக்குரிமையின் மூலம் 2. இராணுவ அதிகாரிகளால்.
3. நிர்வாக அதிகாரிகளால் 4. வரையறுக்கப்பட்ட வாக்குரிமையின் மூலம்

07) நீதிமன்ற விதிகளை மறுசீரமைத்தல், மாற்றியமைத்தல் என்பவற்றுக்கான அதிகாரத்தினை,
1. பிரதமநீதியரசர் கொண்டுள்ளார். 2. சட்டமா அதிபர் கொண்டுள்ளார்.
3. நீதிச்சேவைகள் ஆனைக்குழு கொண்டுள்ளது. 4. உயர்நீதிமன்றம் கொண்டுள்ளது.

08) இலங்கையில் இறுதியானதும் மிக உயர்ந்த நீதிமன்றமாகவும் செயற்படுவது.
1. மேன்முறையீட்டு நீதிமன்றம். 2. மாவட்ட நீதிமன்றம்.
3. உயர் நீதிமன்றம். 4. மேல்நீதிமன்றம்.

09) நீதிச்சேவைஆனைக்குழுவின் தலைமைப் பதவிக்கு உரித்துடையவர்?
1. சட்டமாஅதிபர் 2. பிரதமநீதியரசர் 3. நீதிஅமைச்சர் 4. ஜனாதிபதி

10) சட்டத்தில் காணக்கூடிய முக்கிய பண்பு.
1. சட்டம் நிச்சயமற்றதாகவும் விளக்கமில்லாதும் இருத்தல்.
2. சட்டத்தை மீறுதல் தண்டனை பெறக்கூடிய குற்றமாகக் காணப்படல்.
3. மனிதர்களின் உணர்வுகளுடன் தொடர்புபட்டிருத்தல்.
4. சட்டத்தை தேவையானவாறு வரைவிலக்கணப்படுத்தக் கூடியதாயிருக்கின்றமை.

11) தேசிய அரசுகளின் தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்தாத காரணிகளில் ஒன்று,
1. மானிய முறையின் எழுச்சி.
2. புரட்டஸ்தாந்து மதசீர்திருத்தம்.
3. விஞ்ஞான மறுமலர்ச்சி.
4. முதலாளித்துவத்தின் எழுச்சி.

12) சட்டத்துறையின் முக்கிய பணிகளில் ஒன்று.
1. நீதியை நிலைநாட்டல்
2. சட்டத்திற்கு விளக்கமளித்தல்.
3. நிதி நிர்வாகம்
4. உரிமைகளை பாதுகாத்தல்.

13) அரசாங்கத்தின் மூன்று துறைகளுள் அடங்காதது எது?
1. நிறைவேற்றுத்துறை 2. ஊடகத்துறை 3. சட்டத்துறை 4. நீதித்துறை

14) பின்வருவனவற்றுள் இருகட்சி முறையை பின்பற்றும் நாடு எது?
1. வடகொரியா 2. சீனா 3. இந்தியா 4. பிரித்தானியா

15) ஒரு நாட்டின் அதியுயர் சட்டமாக கருதப்படுவது,
1. அரசியல் யாப்பு 2. தனியார் சட்டம் 3. குற்றவியல் சட்டம் 4. பொலிஸ்சட்டம்

16) சமஷ்டி அரசொன்றின் பண்பாவது,
1. ஓரங்க சட்டசபை.
2. எழுதப்பட்ட அரசியல் யாப்பு.
3. நீதித்துறை மத்திய அரசுக்காக செயற்படல் .
4. அதிகாரங்கள் மத்தியமயப்படுத்தப்பட்டிருத்தல்.

17) பின்வருவனவற்றுள் ஒற்றையாட்சிமுறை நிலவும் நாடு எது?
1. அமெரிக்கா 2. சுவிற்சர்லாந்து 3. பிரான்ஸ் 4. அவுஸ்திரேலியா

18) மாகாணசபை ஒன்றில் ஜனாதிபதியாக செயற்படுபவர்.
1. முதலமைச்சர் 2. தவிசாளர் 3. மாகாண அமைச்சர் 4. ஆளுநர்

19) இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி மன்றம் அல்லாதது.
1. மாநகரசபை 2. கிராமசபை 3. நகரசபை 4. பிரதேசசபை

20) குறிப்பிட்ட நாடு ஒன்றில் அரசுக்கு உரித்தான அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளுக்கு வழங்குதல்.
1. அதிகாரப்பரவலாக்கம்.
2. அதிகாரப்பன்முகவாக்கம்.
3. நிர்வாக பரவலாக்கம்.
4. அதிகாரப்பகிர்வு.

21) நவீன பன்மைப் பண்பாடு சமூகங்களில் காணக்கூடிய சிறப்பான பண்பு
1. கலாசார சங்கமங்கள் வேகமாக நிகழுதல்.
2. மதமோதல்கள் காணப்படல்.
3. உலகமயமாதலின் செல்வாக்கிற்கு உட்படல்.
4. இன நல்லிணக்கம் காணப்படாமை.

22) ரஷ்ய – உக்ரேன் மோதலால் ஏற்பட்ட பாதிப்பு அல்லாதது,
1. ஐரோப்பாவுக்குள் அகதிகள் வருகை அதிகரித்தமை.
2. சர்வதேச சந்தையில் கோதுமை விலை அதிகரித்தமை.
3. போரை தடுப்பதில் ஐக்கியநாடுகள் சபையின் பங்கு விமர்சனத்திற்குள்ளானமை.
4. நாடுகள் பனவீக்கம் நிலைமையில் இருந்து மீண்டமை.

23) இலாபத்தினை முதன்மைப்படுத்திய பொருளாதார முறை எது?
1. சமதர்ம பொருளாதாரமுறை. 2. கலப்பு பொருளாதாரமுறை.
3. முதலாளித்துவ பொருளாதார முறை. 4. சமூகவாத பொருளாதார முறை.

24) சமதர்ம பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாகக் கொண்டிருக்கும் நாடு எது?
1. சீனா 2. தாய்வான் 3. சிங்கப்பூர் 4. இலங்கை

25) பிராந்திய வர்த்தக நடவடிக்கைகளுக்காக சார்க் அமைப்பால் முன்னெடுக்கப்படும் செய்பாடு எது?
1. இருதரப்பு வர்த்தக உடன்பாடு. 2. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை.
3. சார்க் பல்தரப்பு வர்த்தகம். 4. சார்க் திறந்த வர்த்தகம்.

26) இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசாங்கத்தின் அன்மைக்கால திட்டமாக கருதப்படுவது,
1. மகநெகும 2. சபரிகம 3. அஸ்வெசும 4. கம்பரெலிய

27) இலங்கை போன்று தென்னாசியாவில் அதிகம் பொருளாதார பின்னடைவை எதிர் நோக்கியுள்ள நாடு ஒன்று,
1. பாகிஸ்தான் 2. இந்தியா 3. பங்களாதேஷ் 4. மாலைதீவுகள்

28) ஐரோப்பிய வலயநாடுகளில் பெரும்பாலான நாடுகளின் பொதுப்பண அலகு எது?
1. பவுன்ஸ் 2. டொலர் 3. யென் 4. யூரோ

29) நல்லாட்சியின் அடிப்படைப்பண்பாக அமையாதது எது?
1. ஊழல் மோசடி அற்ற ஆட்சி 2. தேர்தலைப்பிற்போடுதல்
3 பொறுப்புக்கூறல். 4. சட்டத்தின் ஆட்சி

30) ஜொஹான் கல்டுங்கின் மோதல் முக்கோணியில் அடங்காத விடயம் எது?
1. புரிந்துணர்வு 2. மனப்பாங்கு 3. சூழமைவு 4. நடத்தை

31) உள்ளக மோதல்கள் அதிகம் இடம்பெறும் நாடு,
1. சீனா 2. வடகொரியா 3. சூடான் 4. பலஸ்தீனம்

32) மோதல்களைத் தீர்க்கும் போது "வெற்றி வெற்றி" தீர்வினைப் பெறுவதற்கு மிகவும் பொருத்தமான முறை எது?
1. மத்தியஸ்தம் வகித்தல். 2. இனக்கப்படுத்தல்.
3 தீர்ப்புக்கூறல். 4. கலந்துரையாடல் முறை.

33) எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றம் அடையும் போது தனிநபரினுள் ஏற்படும் உளமுரண்பாடு, வீட்டு வன்முறை போன்றவை பின்வரும் எந்த மோதலுக்கு உதாணமாகும்.
1. நுண்மையான மோதல் 2. கொள்கை ரீதியான மோதல்
3 உள்நாட்டு மோதல் 4. குழு மோதல்

34) மோதலைத் தீர்க்கும் போது நடுநிலையாளரிடம் காணப்படவேண்டிய முக்கிய பண்பு,
1. பக்கச்சார்பற்றவராக இருத்தல். 2. பொறுமையுடையவராய் இருத்தல்.
3 இரக்கமுடையவராக இருத்தல். 4. நற்சிந்தனை கொண்டவராக இருத்தல்.

35) நிலைமாறு பொருளாதாரத்தின் பண்பு அல்லாதது,
1. நஷ்டத்தில் இயங்கும் அரசநிறுவனங்களை தனியார்மயப்படுத்தல்.
2. பொருளாதார நெகிழ்வு.
3. தனியார் சொத்துடைமை வரையறுக்கப்படல்.
4. தனியார் நிறுவனங்களை ஊக்குவித்தல்.

36) பின்வருவோரில் சட்டமா அதிபரின் பணிகளுக்கு உதவும் அதிகாரி யார்?

1. பிரதமநீதியரசர்
2. சொலிசிட்டர் ஜெனரல்
3. பொலிஸ்மா அதிபர்
4. நீதியமைச்சர்

37) அரசியலமைப்புக்கு மேலதிகமாக அவதானிக்கத்தக்க உள்நாட்டுச் சட்டங்களின் வகைகள் இரண்டும் எவை?

1. சிவில் சட்டமும், முஸ்லிம் சட்டமும்.
2. குற்றவியல் சட்டமும், சர்வதேச சட்டமும்.
3. கண்டியச்சட்டமும், தேசவழமைச்சட்டமும்.
4. குற்றவியல் சட்டமும், குடியியல் சட்டமும்.

38) சிவில் சட்டத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றச் செயல்களில் ஒன்று,

1. ஒப்பந்தங்களை மீறுதல்
2. கொலை
3 களவு
4. சிறுவர் துஷ்பிரயோகம்.

39) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை மாகாண மட்டத்தில் பரவலாக்கும் நோக்கில் நிறுவப்பட்ட நீதிமன்றமானது,

1. மேல் நீதிமன்றம்
2. மாவட்ட நீதிமன்றம்
3. மாகாண மேல் நீதிமன்றம்
4. நீதவான் நீதிமன்றம்

40) 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் படி மாகாண சபையொன்றின் அமைச்சரவையானது முதலமைச்சர் உட்பட,

1. ஏழுபேர் 2. நான்குபேர் 3. ஆறுபேர் 4. ஐந்துபேர்

(40 × 1 = 40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானதாகும்.**
- **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01)

(i) ஜனநாயக ஆட்சிமுறையின் இரண்டு பிரதான பிரிவுகளையும் எழுதுக.

(ii) அதிகாரங்களை குவிமையப்படுத்தல் மற்றும் பிராந்தியங்களுக் அதிகாரங்களை பகிர்தளித்தல் என்பவற்றுடன் தொடர்புடைய அரசுகள் எவை?

(iii) ஐக்கிய அமெரிக்காவின் சட்டத்துறையான காங்கிரசின் இரண்டு சபைகளையும் பெயரிடுக.

(iv) இலங்கையில் மாகாணசபைகள் உருவாக்கப்படுவதற்கு காரணமான யாப்புத்திருத்தத்தையும், மாகாண சபையின் பதவிக்காலத்தையும் குறிப்பிடுக.

(v) பன்மை பண்பாட்டுச் சமூகங்களில் வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி வெற்றிகண்ட நாடுகள் இரண்டைப் பெயரிடுக.

(vi) இலங்கைக்கு வர்த்தக நோக்கமாக வருகை தந்து வெளிநாட்டவர்களுள் இரு பகுதியினரைப் பெயரிடுக.

(vii) அங்கத்துவ நாடுகளிடையே பொதுச்சந்தை ஒன்றை உருவாக்குவதற்கான ஐரோப்பிய நாடுகளை உருவாக்கிய அமைப்பை பெயரிட்டு, அவ்வமைப்பில் இருந்து வெளியேறிய நாட்டையும் பெயரிடுக.

(viii) நாடுகளுக்கிடையில் நிலவும் சர்வதேச மோதல்களின் இரு பிரிவுகளும் எவை?

(ix) 1947 சோல்பரி யாப்பின் கீழ் பாராளுமன்றின் இரு சபைகளும் எவை?

(x) இலங்கைப் பாராளுமன்றிற்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் இரண்டு வழிமுறைகளையும் குறிப்பிடுக.

02) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆட்சி செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பை பெறும் ஆட்சிமுறையே சனநாயக ஆட்சியாகும்.

i) ஜனநாயக மக்கள் சமூகத்தில் நிலவும் பண்புகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.

ii) நேரடி ஜனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களுள் மூன்றைக் குறிப்பிடுக.

iii) a. அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

b. மேலே a இல் குறிப்பிட்ட விடயம் ஒன்றினை விளக்குக.

03) சனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்கு காலம் தவறாத, நியாயமான தேர்தல்கள் அவசியமாகும்.

i) இலங்கையில் தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் இரு நியதிகளும் எவை?

ii) இலங்கையில் இடம்பெறும் தேர்தல்கள் மூன்றைப் பெயரிடுக?

iii) a. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகளுள் மூன்றினைப் பெயரிடுக.

b. மேலே a இல் குறிப்பிட்ட விடயம் ஒன்றினை விளக்குக.

04) தற்கால அரசுகளில் அதிகாரமானது ஆட்சி செயற்பாடுகள் தீர்மானிக்கும் ஆற்றலாக மாறியுள்ளது.

i) *1978* ஜனாதிபதியின் சட்டத்துறை சார்ந்த அதிகாரங்கள் இரண்டையும் குறிப்பிடுக.

ii) *1978* யாப்பின் படி அமைச்சரவையில் இடம்பெறும் மூன்று பிரிவினரும் யாவர்?

iii) a. இலங்கையின் மாகாணசபையொன்றின் நிறுவனக் கட்டமைப்பில் மூன்று விடயங்களைப் பெயரிடுக.

b. மேலே a இல் குறிப்பிட்ட விடயம் ஒன்றினை விளக்குக.

05) "பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் நிலைத்திருப்பிற்குநல்லாட்சியின் தேவை தற்காலத்தில் அதிகம் உணரப்படுகின்றது."

i) நல்லாட்சியில் காணக்கூடிய அடிப்படைப்பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ii) பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் நல்லாட்சி நிலவுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

iii) a. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் ஒற்றுமையுடன் வாழ்வதனால் ஏற்கும் விளைவுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

b. மேலே a இல் குறிப்பிட்ட விளைவு ஒன்று சமூகத்தின் நல்வாழ்விற்குக் காரணமாகும் முறையினை விளக்குக.

06) மோதல்கள் சமூகத்திற்கு பாதிப்பாக அமைவதால் அவற்றை ஆரம்பகட்டத்திலேயே தீர்வுக்குட்படுத்த வேண்டும்.

i. சமூக, பொருளாதார மோதல் நிலை வறுமை சார்ந்த நிலையை உருவாக்கிய இரு நாடுகளை பெயரிடுக.

ii. மோதல்களை தீர்க்க பயன்படுத்தும் முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

iii. a. தீர்ப்புக் கூறல் செயற்பாட்டில் காணத்தக்க இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

b. மேலே (a) இல் குறிப்பிட்ட பண்புகளில் ஒன்றை விளக்குக.

07) "சட்டம் தொடர்பாக அறியாமல் இருத்தல் அதிலிருந்து தப்பிச் செல்வதற்கான வழியன்று"

i. சட்டத்தின் மூலாதாரங்களுள் இரண்டைக் குறிப்பிடுக.

ii. இலங்கையின் நீதிமன்ற நடவடிக்கைகளில் சட்டம் தொடர்பிலான உயர்மட்ட அதிகாரப்பதவிகளை உரிமைகளை பாதுகாக்கக் கூடிய மூன்று அமைப்புகளை பெயரிடுக.

iii. a.இலங்கையிலுள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்கக் கூடிய மூன்று அமைப்புகளைப் பெயரிடுக.

b. மேலே (a) இல் குறிப்பிட்ட விடயங்களுள் ஒன்றினை விளக்குக.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2023

தரம் - 11	கர்நாடக சங்கீதம்	நேரம் :- 3.00 மணித்தியாலம்

பெயர் / சுட்டெண் .....

பகுதி – I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. "சௌக்க வர்ணம் என அழைக்கப்படுவது.

1) நவராகமாலிக வர்ணம் 2) அடதாளவர்ணம்

3) ஜம்பை தாள வர்ணம் 4) பதவர்ணம்

02. இனி நமக்கொரு கவலையுமில்லை" எனும் கீர்த்தனை அமைந்துள்ள தாளம்.

1) ஆதி 2) ரூபகம் 3) ஜம்பை 4) ஏகம்

03. பதங்களில் இயற்றியவரின் முத்திரை காணப்படுவது.

1) பல்லவியில், முதல் சரணத்திலாகும்

2) அனுபல்லவியில், முதல் சரணத்திலாகும்

3) அனுபல்லவியில், கடைசிச் சரணத்திலாகும்

4) பல்லவியில், அனுபல்லவியாகும்

04. அடதாள அலங்காரத்தின் ஆரம்ப வரிசை குறிப்பது

1) ஸரீகா | ஸாரிகா | மா | மா ||

2) ஸரிகரி | ஸரி | ஸரிகம

3) ஸரிகம | கரி | ஸரிகரி | ஸரிகம ||

4) ஸரிக | ஸரி | கம ||

05. 72 மேளகர்த்தா இராகங்களில் 4வது, 10வது சக்கரங்களில் இடம் பெறும் ரிஷப காந்தார ஸ்வரப் பெயர்கள் குறிக்கும் சங்கேதாட்சரங்கள் முறையே.

1) ர, கி 2) ரி, கி 3) ரி, கு 4) ரு, கு

06. வயலில் வாத்திய அமைப்பினை முதலில் உருவாக்கியவர் யார்?

1) பாலுஸ்வாமி தீட்சிதர் 2) ஸ்ட்ராடி வேரியஸ்

3) பீதோவன் 4) சுப்பராம தீட்சிதர்

07. சுத்த நிஷாதத்திற்கு ஒப்பான ஸ்வரஸ்தானம்.

1) சாதாரண காந்தாரம் 2) சதுஸ்ருதி ரிஷபம்

3) சதுஸ்ருதி தைவதம் 4) கைசிகி நிஷாதம்

08. பின்வரும் இராகங்களுள் பிரதி மத்திமத்தை எடுத்துக்கொள்ளும் ராகம்

1) ஹரிகாம்போதி 2) ஆரபி 3) மத்யமாவதி 4) பந்துவராளி

09. புல்லாங்குழலின் முகராத்திரத்துளைக்கு மிக அருகில் உள்ள துவாரம்.

1) ஸ்வராந்திரம் 2) முத்திரைதுளை

3) நாதரந்திரம் 4) தாரதந்திரம்

10. பின்வரும் ஸ்வரங்களுள் அனுமந்திர ஸ்தாயியைக் குறிக்கும் ஸ்வரம்.

1) ஸ 2) ஸ் 3) ஸ 4) ஸ்

11. சஞ்சாரம் எனப்படுவது.

1) ஜதிக்கோர்வை 2) சங்கதி 3) ஸ்வரக்கோவை 4) மாது

12. "அபகாரநிந்தை....." எனும் திருப்புகழ் பாடப்படும் தளம்.

1) ஆதி 2) சதுஸ்ரரூபகம் 3) திஸ்ரதிரிபுடை 4) கண்டஜம்பை

13. பின்வரும் சப்த தாள அலங்காரங்களுள் குறில் - நெடில் ஸ்வரங்களைக் கொண்டுள்ள அலங்காரம்.

1) துருவதாள அலங்காரம் 2) அடதாள அலங்காரம்

3) மட்டியதாள அலங்காரம் 4) ஏகதாள அலங்காரம்

14. பின்வரும் கீர்த்தனைகளுள் பாஷாங்க இராகத்தில் அமைந்த கீர்த்தனை.

1) "பிறவார வரம் தாரும்....." 2) "நடனமாடினார்....."

3) "அள்ளியுண்டிடலாம்....." 4) "இனிநமக்கொரு....."

15. ஆதிகாலத்தில் தமிழிசைக்குப் பக்க வாத்தியங்களாகப் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள்.

1) யாழ், நாதஸ்வரம் 2) யாழ், குழல்

3) வயலின், யாழ் 4) வீணை, மிருதங்கம்

16. பின்வருவோருள் அபூர்வ தாளங்களிலும் பல்வேறு நடைகளிலும் பாடல்களை இயற்றியவர்.

1) அருணகிரிநாதர் 2) தியாகராஜர் 3) நாவுக்கரசர் 4) சேந்தனர்

17. பிறழ்ச்சிப் பண் என அழைக்கப்படும் இராகம்.

1) ஷாடவராகம் 2) பாஷாங்கராகம் 3) உபாங்கராகம் 4) ஜன்னியராகம்

18. சீதாராமவிஜயம் எனும் இசை நாடகத்தை இயற்றிய வாக்கேயகாரர்.

1) மாரிமுத்தாப்பிள்ளை 2) புரந்தரதாஸர்

3) மாரிமுத்தாப்பிள்ளை 4) தியாகராஜர்

19. தோஷமுள்ள இராகம்.

1) நட்டராகம் 2) தக்கராகம் 3) விவாதிராகம் 4) பழந்தக்கராகம்

20. உத்க்ருஹம், த்ருதம், மேளபாகம், ஆபோகம் என்னும் அங்கங்களைக் கொண்ட உருப்படி.

1) இலட்சணகீதம் 2) திருப்புகழ் 3) பிரபந்தம் 4) ஸ்வரஜதி

21. கமாபத, நீதநி பதாநீ ;; ஸ்ா ; என்னும் ஸ்வரக் கோர்வையின் மொத்த அட்சரம்.

1) 20 2) 21 3) 22 4) 23

22. தகிட தகதிமி என்ற ஜதிச் சொல் குறிப்பது.

1) கண்டநடை 2) சதுஸ்ரநடை 3) சங்கீர்ணநடை 4) மிஸ்ரநடை

23. பதம் என்ற உருப்படியைப் பாடும் போது வெளிப்படும் ரசம்.

1) கருணை 2) வீரம் 3) சிருங்காரம் 4) சாந்தம்

www.ikeou.lk

24. வயலின் வாத்தியத்தின் தந்திதாங்கி, விரற்பலகை, பிருடைகள் ஆகிய பாகங்களை செய்ய பயன்படும் மரம்.

1) பைன் 2) மேப்பிள் 3) கருங்காலி 4) சிகமூர்

25. பின்வரும் வாத்தியங்களுள் மங்கள இசையை உண்டாக்கும் வைத்தியம்.

1) ஹர்மோனியம் 2) தம்புரா 3) புல்லாங்குழல் 4) நாதஸ்வரம்

26. 72 மேளகர்த்தா சக்கரத்தில் ஆதித்ய சக்கரம் எடுத்துக்கொள்ளும் மேள எண்கள்.

1) 49 – 54 2) 55 – 60

3) 61 – 66 4) 67 - 72

27. ஆலயங்களில் சுவாமி உலா வரும் போது மல்லாரி இசையை இசைக்க பயன்படும் வாத்தியங்கள்.

1) மிருதங்கம், நாதஸ்வரம் 2) புல்லாங்குழல், தவில்

3) நாதஸ்வரம், வயலின் 4) நாதஸ்வரம், தவில்

28. சாமகானம் பாடப்படும் இராகம்.

1) கரகரப்பிரியா 2) ஹரிகாம்போதி 3) மோகனம் 4) தோடி

29. பண்ணிசையில் ஷாடவ இராகத்தைக் குறிக்கும் பெயர்.

1) பண் 2) பண்ணியம் 3) திறம் 4) திறத்திறம்

30. பக்தி இலக்கியங்களினூடாக பக்தி இசையில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலப்பகுதி.

1) 5ம், 6ம் நூற்றாண்டு 2) 7ம், 8ம் நூற்றாண்டு

3) 14ம், 15ம் நூற்றாண்டு 4) 17ம், 18ம் நூற்றாண்டு

31. சதுஸ்ரஜாதி துருவதாளத்தின் அட்சர எண்ணிக்கையைக் கொண்ட தாளம்.

1) சதுஸ்ரஜாதி மட்டியதாளம் 2) சங்கீர்ணஜாதி ரூபகதாளம்

3) கண்டஜாதி அடதாளம் 4) கண்டஜாதி ஜம்பைதாளம்

32. பஞ்சபுராணத்தில் திருப்பல்லாண்டிற்குப் பின்னர் பாடப்படுவது.

1) திருப்புகழ் 2) திருவிசைப்பா

3) திருப்புராணம் 4) திருவாசகம்

33. எல்லா அங்கங்களுக்கும் சாகித்தியம் அமைந்த உருப்படி.

1) பதவர்ணம் 2) தானவர்ணம்

3) அடதாள வர்ணம் 4) நவராகமாலிகாவர்ணம்

34. துரிதகாலங்களை இலகுவில் வாசிக்கக்கூடிய தந்தி வாத்தியம்.

1) தம்புரா 2) வயலின் 3) வீணை 4) ஸித்தன்

35. ஆரோகணத்திலோ அவரோகணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வருதல்.

1) வர்ஜராகம் 2) வக்ரராகம் 3) பாஷாங்கராகம் 4) உபாங்கராகம்

36. சேக்கிழார் சுவாமிகளால் அருளப்பட்ட பெரியபுராணம் பாடப்படும் இராகத்திற்கு இணையான பண்.

1) காந்தாரம் 2) நட்டராகம் 3) தக்கேசி 4) செந்துருத்தி

37. ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், சைகிசிநிஷாதம் எனும் ஸ்வரஸ்தானங்களுடைய ராகம்.

1) மாயாமாளவகௌளை 2) ஹரிகாம்போதி

3) கரகரப்பிரியா 4) கல்யாணி

38. கல்லினாலான நாதஸ்வரங்கள் காணப்படும் கோவில்கள்.

1) திருமயம், திருவண்ணாமலை

2) தஞ்சைப் பெருங்கோவில், கும்பகோணம் கும்பேஸ்வரர்

3) திருச்செந்தூர், திருவண்ணாமலை

4) கும்பகோணம் கும்பேஸ்வரர், ஆழ்வார்

39. ஆதிதாள வர்ணத்தினை முதலாம் காலத்தில் பாடும் போது அட்சரம் ஒன்று எடுத்துக்கொள்ளும் ஸ்வரங்கள்.

1) 1 2) 2 3) 4 4) 8

40. தோஷி நிவர்த்திக்குரிய ராகம்.

1) மத்தியமாவதி 2) மோகனம் 3) கல்யாணி 4) கரகரப்பிரியா

(1 x 40 = 40 *புள்ளிகள்)*

பகுதி II

❖ **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

(01) 01. விவாதி மேளங்களின் எண்ணிக்கை எத்தனை?

02. வீணையின் தாள தந்திகளுள் முதலாவது தந்தியின் பெயர் யாது?

03. தானஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படியினைத் தருக?

04. திருத்தாண்டகம் பாட உகந்த இராகம் எது?

05. மேஜர்ஸ்கேல் என்பதற்கு ஒப்பான ராகம் எது?

06. கர்நாடக சங்கீதம் - ஹிந்துஸ்தானி சங்கீதம் எனும் இரு பிரிவுகளை முதன் முதலில் குறிப்பிடும் நூல் எது?

07. பேரின்பப்பதங்கள் இயற்றப்பட்ட மொழி யாது?

08. 16 ஸ்வரப் பெயர்களில் ஷட்சுருதிரிஷபம் ஒலிக்கும் ஸ்வரஸ்தானம் யாது?

09. நவரோஜ் ராகத்திற்கு இணையான பண்களைத் தருக?

10. அக்னி – கோ, திசி – மா என்னும் ஸங்கேதாட்சரங்களால் குறிப்பிடப்படும் இராகங்கள் முறையே தருக.

(12 புள்ளிகள்)

www.lkedu.lk

(02) பின்வரும் உருப்படிகளில் விரும்பிய ஓர் உருப்படியின் இலட்சணத்தை விரிவாக தருக. (இயற்றியவர், உதாரணம் உட்பட)

1) பதம் 2) வர்ணம் 3) ஜதீஸ்வரம்

(12 புள்ளிகள்)

(03) பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. (உருப்படிகள், சஞ்சாரம் உட்பட)

01) 28வது மேளகர்த்தா இராகம்

02) முதன் முதலில் மனித பார்வைக்கு வந்த இராகம்

03) புராணம் பாடப்படும் இராகம்

(12 புள்ளிகள்)

(04) 01. பிரதான வாத்தியமாகவும் பக்க வாத்தியமாகவும் வாசிக்கப்படும் தந்தி வாத்தியம் எது?

02. அவ்வாத்தியத்தின் படம் வரைந்து, பாகங்களைக் குறிப்பிடுக.

03. அவ்வாத்தியத்தின் அமைப்பினையும், தந்திகள் சுருதி கூட்டப்படும் முறையினையும் குறிப்பிடுக.

03. அவ்வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமான இரண்டு வித்துவான்களைத் தருக?

(1 + 4 + 5 + 2 = 12 புள்ளிகள்)

(05) தியாகராஜ சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் இசைக்கு ஆற்றிய பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

01) பிறந்த இடம்

02) வாழ்ந்த காலம்

03) இசைப்பணி

04) இவரது உருப்படிகள்

05) முத்திரை, ரஸம்

(12 புள்ளிகள்)

(06) 01. 72 மேளகர்த்தா அமைப்பில் 7 – 12 வரையான சக்கரங்களின் பெயர்களை ஒழுங்குமுறையாகத் தருக.

02. 72 மேளகர்த்தா அமைப்பில் உத்தராங்கப்பகுதியின் இராகங்கள், மேள எண், ஸ்வரஸ்தானங்களை அட்டவணைப்படுத்துக.

(2 + 10 = 12 புள்ளிகள்)

(07) இந்தியாவின் 14ம், 15ம் நூற்றாண்டின் கலாசாரப்பின்னணி பற்றி ஆராய்க.

(12 புள்ளிகள்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

முதலாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் : 11	பாடம் : சித்திரக்கலை 43	நேரம் : 3.00 மணி 10 நிமிடம்

பெயர் / சுட்டெண் : .....

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **வினா இலக்கம் 01 தொடக்கம் 05 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக தரப்பட்டுள்ள விடயங்களிற்கு பொருத்தமான ஆங்கில எழுத்தினை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**


A


B


C


D


C .

01) வத்திக்கான் சிஸ்ரைன் தேவாலயத்தின் பலிபீடத்துக்குப் பின்னால் உள்ள சுவரில் உலகின் மிகப் பெரிய பிரஸ்கோ சீக்கோ நுட்பமுறையில் அமைந்தா ஓவியம் எனக் கருதப்படும் இறுதித் தீர்ப்பு ஓவியத்தினைக் குறித்துக் காட்டும் ஆங்கில எழுத்து. ( )

02) "தாமரை மலர் மீது சித்தார்த்த புத்தர் நடந்து வருதல்" எனும் லிதோ அச்சு சித்திர நுட்பமுறையில் அமைந்த ஓவியம் படத்தினைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்து. ( )

03) கிறீஸ்தவ சமய கதாபாத்திரங்களை இலங்கையரைப் போல் சித்தரித்து வரையப்பட்ட வெற்றியுடன் "ஜெருசலத்திற்குள் பிரவேசித்தல்" எனும் தலைப்பில் அமைந்த ஓவியத்தைச் காட்டும் ஆங்கில எழுத்து ( )

04) பிரஸ்கோ சீக்கோ (உலர்ந்த சாந்து) நுட்பமுறையில் வரையப்பட்ட இறுதி இராப்போசனம் எனும் ஓவியத்தினைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்து. ( )

05) "சுவாசி விவரணய" என்ற ஓவியத்தை வெளிப்படுத்தி நிற்கும் ஆங்கில எழுத்து. ( )

- **இலக்கம் 6 தொடக்கம் 10 வரையாக தரப்பட்டுள்ள வாக்கியங்களில் காணப்படும் இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி வாக்கியத்தினைப் பூரணப்படுத்துக.**

06) "மட்பாண்டக் கூடம்" என்ற தலைப்பில் அமைந்த ஓவியம்.....எனும் கலைஞரால் வரையப்பட்டது ஆகும்.

07) "தொழிலின்மை" என்ற தலைப்பில் அமைந்த ஓவியம்.....கலைஞரால் வரையப்பட்டதாகும்.

08) ஒட்டுச்சூளையையும் சூழவுள்ள பிரதேசத்மையும் சித்தரிப்பதற்காக பிரகாசமான நீர் வர்ணங்களையும் பயன்படுத்தி வரையப்பட்ட ஓவியம் ..... கலைஞரால் வரையப்பட்டதாகும்.

09) 33 வருடகாலம் "சிரித்திரன்" என்னும் வெளியிட்டதோடு அச்செய்தித் தாளில் காட்டூன் சித்திரங்கள்..... கலைஞரால் வரையப்பட்டதாகும்.

10) 1950 ஆம் தசாப்தத்தில் "த ரைம்ஸ் ஒவ் சிலோன்" எனும் செய்தித்தாளில் காட்டூன் படங்கள் வெளியிட்டு புகழ் பெற்ற கலைஞர்.....ஆவார்.

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

❖ **வினா இல 11 தொடக்கம் 15 வரையாக தரப்படும் வாக்கியங்களில் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குள் அடையாளம் இடுக.**

11) A.C.G.S அமரசேகரா என்னும் ஓவியர் இலங்கையின் புகழ்பெற்ற ஓவியக் கலைஞர்களுள் ஒருவராவார். ( )

12) உலகப் புகழ் பெற்ற சிகிரியாக் குன்றின் குடைவுகளில் காணப்படும் பெண் ஓவியங்கள் (அப்சரா) அனைத்தும் காசியப்பன் மன்னன் காலத்தில் வரையப்பட்டதாகும். ( )

13) "தொழிலின்மை" என்ற ஓவியம் "கியரஸ்கியுரோ" (ஒளி இருள்) நுட்பமுறையை பின்பற்றி வரையப்பட்டுள்ள ஓவியம் அகும். ( )

14) ஜீ.எஸ் (G.S) பெர்ணாந்து என்ற ஓவியர் ஓர் ஐரோப்பிய ஓவியர் ஆவார். ( )

15) "மொனாலிசா" என்ற தலைப்பில் அமைந்த ஓவியம் வரைந்த ஓவியர் இலங்கை நாட்டை சேர்ந்தவராவார். ( )

❖ **16 தொடக்கம் 20 வரையான படங்கள் ஒவ்வொன்றுக்கும் P,Q,R,S,T ஆகிய உருவங்களில் இருந்து தெரிவு செய்து அது குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

16)  (.....)



P

17)  (.....)



Q

18)  (.....)



R

19)  (.....)



S

20)  (.....)



T

❖ **வினா இலக்கம் 21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

21) ஸ்டான்லி அபேசிங்ஹாவினது படைப்புகளுள் முக்கிய இடத்தை வகிக்கும் ஓவியம் யாது?
1. ஊர்வலம் (பெரகரா) 2. நல்ல சமாரியன் 3. ஒட்டுச் சூளை 4. வெள்ளை சேவல்

22) ஜி ப்ரி யூனுஸ் என்னும் காட்டூன் ஓவியக் கலைஞரினால் படைக்கப்பட்ட சுவாரசியமான காட்டூன் படம் பாத்திரம் யாது?
1. புஞ்சி சிங்ஞோ 2. அப்புஹாமி 3. தக்கொத் பத்மாவதி 4. கஜமேன்

23) நோயில் இருந்து விடுபடுதல், சௌபாக்கியம், செழிப்பு போன்ற நோக்கங்களை அடைவதற்காக சாந்திக் கிரியைகளுக்குரிய உடைகள் அணிந்த நிலையில் அச்சமடைந்துள்ள விதத்தையும் வெளிப்படுத்தும் ஓவியம் எது?

1. மட்பாண்டக் கடை
2. மொனாலிசா
3. பேயோட்டியின் மகள்
4. மடோனா டெலா சேதியா

24) கிரேக்க தத்துவ ஞானிகளான அரிஸ்டோடல், பிளேட்டோ, பைதகரஸ் போன்றவர்களை வெளிக்காட்டி நிற்கும் மறுமலர்ச்சிக்கால ஓவியம் எது?

1. புல் வெளியில் மடோனா
2. லெடா
3. இறுதி இராப்போசனம்
4. எதென்ஸ் பள்ளி

25) கீர்த்தி ஸ்ரீ கேகவர்ண அரசனிடம் இருந்து புனித தந்தத்தை பாதுகாக்க பிராமண வேடம் பூண்டு இலங்கைக்கு வந்த காட்சியை வெளிப்படுத்தும் ஓவியம்.

1. ஹேமமாலாவும் நந்தகுமாரனும்
2. வெள்ளரசு கிளை கொண்டுவருதல்
3 மாறனின் யுத்தம்
4. தலைவி (நாயிகா)

❖ **26 தொடக்கம் 30 வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்தினையும் அவதானித்து விடையினை எதிரே உள்ள கோட்டில் எழுதுக.**

26) 

.....

.....

27) 

.....

.....

28) 

.....

.....

29) 

.....

.....

30) 

.....

.....

www.ikeou.lk

❖ **31 தொடக்கம் 35 வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.**

31) கியரொஸ்குறோ: .....

.....

32) "43"என்றகுழு : .....

.....

33) பிரஸ்கோ புவனோ நுட்பமுறை :.....

.....

34) முன்ணணி,மத்தியஅணி,பின்னணி : .....

.....

35) எதென்ஸ் பள்ளி : .....

.....

❖ **36 தொடக்கம் 40 வரை கீழே தரப்பட்டுள்ள கலையாக்கத்தினை இனங்கண்டு அதன் கலையம்சங்களை பகுப்பாய்வு செய்யும் வகையில் ஒவ்வொரு இலக்கத்தின் கீழ் இருக்கும் உபதலைப்புகளுக்கு ஏற்ப ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.**



36 தலைப்பு / இனங்காணுதல் : .....

37ஓவியர் / கலைஞர் : .....

38கருத்து : .....

39.வர்ணங்கள்: .....

40. ஒழுங்கமைப்பு : .....

பகுதி – II

- ❖ **முக்கிய கவனத்திற்கு**
- ❖ **விடைத்தாள் பின்பக்கத்தில் இடது பக்க மேல் மூலையில் உங்கள் சுட்டெண்ணையும் எழுதுக.**
- ❖ **வரையப்பட்ட சித்திரத்தின் தலைப்பினை எழுதுக.**
- ❖ **பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதாள் உலர்ந்திருக்க வேண்டும்.**
- ❖ **பஸ்ரல வரண்ம், நீர்வர்ணம் போன்ற பொருத்தமான ஊடகத்தினைப் பயன்படுத்தவும்.**
- ❖ **"அ" பகுதி அல்லது "ஆ" பகுதி அல்லது "இ" பகுதி ஆகிய மூன்று பகுதியில் இருந்து ஏதாவது ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுக.**

- **பகுதி "அ" கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம்**
  1. வணக்கஸ்தலம் ஒன்றின் இரவுக் காட்சி.
  2. விளையாட்டுப்போட்டி ஒன்றின் உணர்ச்சி பூர்வமான சந்தர்ப்பம்.
  3. விஜயன் இலங்கைக்கு வருகை.

- **பகுதி "ஆ" அலங்காரச்சித்திரம்**
  1. மரக்கதவு ஒன்றுக்கான அலங்காரம்.
  2. ஐந்து இதழ் உடைய பூ, இலை வடிவங்களைப் பயன்படுத்தி சீத்தைதுணிக்கான அலங்காரம் (பரவரூப நுட்பமுறை)
  3. குழந்தை படுக்கை விரிப்பு ஒன்றுக்கான அலங்காரம் (பரவரூப நுட்பமுறை)
- **பகுதி " இ" கிறபிக் சித்திரம்**
  1. "வனவளத்தைப் பாதுகாப்போம்" என்ற தலைப்பில் சுவரொட்டிச்சித்திரம் வரைதல்.
  2. சொக்லேட் ஒன்றுக்கான பொதி உறையை வடிவமைத்து வரைதல்.
  3. புதிய வங்கி ஒன்றுக்கான சின்னம் ஒன்றை வரைதல்.

www.ikedu.lk

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

முதலாந் தவணைப் பரீட்சை - 2023

தரம் - 11	நாடகமும் அரங்கியலும்	நேரம் :- 3.00 மணித்தியாலம்

பெயர் / சுட்டெண் .....

பகுதி - I

மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

01. காண்பிய வழி சித்தரிப்பு என்பது.
    1) உடல் உறுப்புக்களால் சித்தரிப்பது
    2) முகபாவங்களால் சித்தரிப்படுவது
    3) குரலால் சித்தரிக்கப்படுவது
    4) வேட உடை, ஒப்பனை மற்றும் அரங்கப் பொருள்களால் சித்தரிக்கப்படுவது

02. ஊமம் என்பது.
    1) செயலை ஆடல் வழியாக சித்தரிப்பது
    2) தாளம் சந்தத்திற்கு ஏற்பபாடி நடித்தல்
    3) வாய்மொழியை பயன்படுத்தாது நடிபாகத்தை சித்தரிப்பது
    4) பாடல், ஆடல் வழியாகச் சித்தரிப்பது

03. பாத்திரமொன்றின் சமூகவியல் பண்பை எடுத்துக்காட்டுவது.
    1) பௌதீக இயல்பு
    2) நடத்தைக் கோலம்
    3) விருப்பு வெறுப்பு
    4) தொழில், இனம்

04. பின்வருவனவற்றுள் மலையகக் கூத்து.
    1) காத்தான்கூத்து
    2) காமன் கூத்து
    3) மகிடிக் கூத்து
    4) கோவலன் கூத்து

05. ஆரொடு நோகேன் நாடகம்.
    1) சிறுவர் நாடகம்
    2) பா நாடகம்
    3) பாடசாலை நாடகம்
    4) அரசன் நாடகம்

06. ஆரொடு நோகேன் நாடகத்தில் இடம்பெறும் மூன்றாம் குடும்ப பாத்திரங்களைக் கொண்ட தொகுதி.
    1) ராஜ்குமார், சீலா, றஜீவ், ஆரணி
    2) இராஜதுரை, சரோஜினி, ஆரணி, அம்பிகை
    3) இராஜதுரை, செல்வராணி, ஆரணி, ரஜீவ்
    4) றஞ்சித்குமார், சுபத்திரா, ஷங்கரி

07. தானயம்பொல எனும் அரங்க வெளியில் ஆடப்படும் ஆற்றுகை வடிவம்.
    1) கூத்து
    2) கோலம்
    3) சொக்கரி
    4) நாடகம்

08. கருத்தூன்றல் பயிற்சிக்கு அழுத்தம் கொடுக்கப்படும் அரங்க விளையாட்டு
    1) இறால், நண்டு, மீன்
    2) ஆடும் வீடும்
    3) நாரை நாராய்
    4) கரடியும் கிராம மக்களும்

09. ''உடக்குப்பாஸ்'' எனும் நாடக நிலைச் சடங்கு ஆடப்படும் இடம்.

1) வங்காலை 2) முருங்கன் 3) பேசாலை 4) நானாட்டான்

10. நாடகத் தயாரிப்பின் போது விளம்பரம் செய்தல், விற்பனை சீட்டுக்களை விநியோகம் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்.

1) நடிகர் 2) நெறியாளர் 3) தயாரிப்பாளர் 4) மேடை முகாமையாளர்

11. நாடக எழுத்துருவிற்கு உயர் கொடுத்து அரங்கில் உலாவ விடுபவர்

1) தயாரிப்பாளர் 2) நடிகர் 3) நெறியாளர் 4) நாடக ஆசிரியர்

12. மேடைப் பரப்பொன்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி எது

1) UL, UR 2) CL, CR 3) CU, CC 4) DL, RD

13. அண்ணாவி நாடக மரபு என அழைக்கப்படும் கலை வடிவம்

1) கூத்து 2) இசை நாடகம் 3) வில்லுப்பாட்டு 4) பரதர்

14. நாடகம் என்பது அசைவுகளின் தொகுதி எனக் கூறியவர் யார்.

1) மரிஸ்பெயாட் 2) அரிஸ்ரோட்டில் 3) பரதர் 4) J.J தொம்சன்

15. பத்தினி தெய்வத்துடன் தொடர்புடைய சிங்கள சடங்கு.

1) கோலம் 2) சொக்கரி 3) தொவில் 4) நாடகம்

16. நாடகத்தில் உடல் அசைவுகளின் பயன்பாடு.

1) மேடையில் இடங்களைச் சுட்டிக்காட்ட
2) இவ்வகை நாடகம் என எடுத்தியம்ப
3) பாத்திரத்தின் உணர்வுகளை எடுத்துக்காட்ட
4) நாடகத்திற்கு வலுவூட்டல்

17. நடிகரின் பேச்சு மொழி உச்சரிப்பை விருத்தி செய்வதற்கு மிக அவசியமானது.

1) புலனடக்கப்பயிற்சி 2) தளர்வுப்பயிற்சி
3) சுவாசப் பயிற்சி 4) தியானம்

18. வேடமுகம் பயன்படுத்தும் சிங்கள நாடகம்.

1) கோலம் 2) சொக்கரி 3) தொவில் 4) நூர்த்தி

19. ஸ்பெசல் நாடக மரபில் சிறந்து விளங்கிய நடிகர்

1) பிரான்சிஸ் ஜெனம் 2) அ. தாசீசியஸ்
3) எம்.வி கிருஸ்ணாழ்வார் 4) நா.சுந்தரலிங்கம்

20. பின்வருவனவற்றில் மோடிமைப்படுத்தப்பட்ட நாடகம் எது.

1) சுந்தரம் எங்கோ 2) சங்கிலி
3) இராவணேசன் 4) உடையார்மிடுக்கு

21. அரங்கில் நடைபெறும் ஒரு விடயத்தை குறிப்பாகக் காட்டப்பயன்படும் ஒலிவகை

1) பெருக்கொளி 2) வர்ணச்சில்லு 3) பொட்டொளி 4) கரைஒளி

22. மரபுவழிக் கூத்தொன்றில் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் பணியை மேற்கொள்பவர்

1) சபையோர் 2) கட்டியக்காரன் 2) பாத்திரங்கள் 4) பபூன்

23. வாசிப்பு அரங்கில் காட்சி படிமங்கள் தோன்றுவது

1) அரங்கவெளியில் 2) மேடையில் 3) எழுத்துருவில் 4) மனவெளியில்

24. புதிய தொரு வீடு நாடகத்தின் மையக்கருத்திற்கு அழுத்தம் கொடுக்கும் பாடல்

1) போகாத வழி மீதல் 2) காலை எழுந்து வந்து

3) தூரத்தே ஏலே வெண்மணலே 4) சிறு நண்டு மணல் மீது

25. ஆரொடு நோகேன் நாடகத்தின் பிரதான காட்சிப்பொருள்

1) வீடு 2) கதிரை 3) வாயிற்படிக்கட்டு 4) நிலைக்கண்ணாடி

26. நடிகர் தேர்வில் ஒரு பாத்திரத்தினூடாக இன்னொரு பாத்திரத்தினை தெரிவு செய்யும் முறை.

1) நேர்முகத் தேரிவு 2) சல்லடைத் தேரிவு

3) நிறந்த தெரிவு 4) மூடிய தெரிவு

27. ஆற்றுவோரும் பார்ப்போரும் நேரடித் தொடர்பினைக் கொண்ட கலை வடிவம்.

1) நாடகம் 2) நடனம் 3) வில்லுப்பாட்டு 4) மேற்கூறிய யாவும் சரி

28. கிரேக்க மரபில் பார்ப்போருக்கு ஏற்படும் உளர்க் கிளர்வு நிலை.

1) அபிநயம் 2) கதாசிஸ் 3) ரசம் 4) மெய்ப்பாடு

29. பாத்திரத்தில் சித்தரிப்பின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

1) கரு 2) பாத்திர பண்புகள்

3) பண்பாடு கலாசார பின்னணி 4) மேற்கூறிய யாவும்

30. 'அண்டம் உலாவிய மாவில்.....' என்ற பாடல் இடம் பெறும் நாடகம்.

1) காமன் கூத்து 2) வசந்தன் கூத்து

3) காத்தான் கூத்து 4) பூதத்தம்பி

31. ஒளியமைப்பின் பிரதான பணிகளில் ஒன்று.

1) மேடையை அழகுபடுத்தல்

2) காட்சிகளை தெளிவாக்க

3) நரகத்தின் உணர்வு நிலையை முனைப்புறுத்திக் காட்டுதல்

4) நடிகர்களை காட்டுவதற்கு

32. தமிழ்நாட்டில் சிறுவர் அரங்கிற்கென முத்திரை பதித்து கொண்டவர்.

1) ந.முத்துசாமி 2) வெளி.ரெங்கராயன்

3) ஏ.ஜே.குணசேகரன் 4) வேலு சரவணன்

33. பின்வருவனவற்றில் யாழ்ப்பாண தென்மோடி கூத்துக்களுள் அடங்காதது.

1) எஸ்தாக்கியா 2) தேவ சகாயம் பிள்ளை

3) கருங்குயில் குன்றத்து கொலை 4) பப்பிரவாகன்

34. யுதார்த்த நாடகத்தில் வரும் பாத்திரங்களின் வேட உடை.

1) குறியீட்டுத் தன்மையானதாக இருக்கும்

2) யதார்த்தமும் குறியீட்டுத்தன்மையானதாகவும் காணப்படும்

3) பகட்டு ஆடம்பரமாக இருக்கும்

4) இயல்பாக பாத்திரம் பண்பை வெளிப்படுத்துவதாக இருக்கும்

www.ikeau.lk

35. அரங்க விளையாட்டை விளையாடுவதன் மூலம் பெறப்படும் திறன்கள் அல்லாதது.

1) கற்பனைத் திறன் 2) கவலையடைதல்

3) மனதை ஒருநிலைப்படுத்தல் 4) மேற்கூறிய யாவும்

36. தோணி என்னும் சிறுகதையை எழுதியவர்.

1) ஆ.செ.முருகானந்தம் 2) வ.அ.இராசரத்தினம்

3) ச.சண்முகநாதன் 4) அ.தாசீசியஸ்

37. யாதாயினும் ஒரு விடயம் தொடர்பில் ஏற்படுகின்ற எதிரெதிர் நிலைகள்.

1) மோடி 2) கரு 3) பாத்திரம் 4) மோதுகை

38. முல்லை மோடி என அழைக்கப்படும் கூத்துமரபு.

1) காமன்கூத்து 2) கோவலன் கூத்து

3) அருச்சுனன்தபசு 4) காத்தவராஜன் கூத்து

39. படத்தில் காட்டப்படும் அரங்கவியலாளர் நெறியாள்கை செய்த நாடகம்.



1) புதியதொரு வீடு

2) ஆரொடு நோகேன்

3) வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்

4) எந்தையும் தாயும்

40. படத்தில் காட்டப்பட்ட சடங்கு.



1) சூரன்போர்

2) பாண்டவர் வனவாசகம்

3) குளிர்த்தி

4) வேட்டைத்திருவிழா

(40 x 1 = 40 புள்ளிகள்)

பகுதி II

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக

(01) சுருக்கமான விடை தருக.

01. புதிதளித்தல் என்றால் என்ன?

02. மகிடிக்கூத்து ஆடப்படும் பிரதேசம் யாது?

03. கூத்திலே மாத்துப்பூசுதல் என்றால் என்ன?

04. இறுதி ஒத்திகையை எவ்வாறு அழைப்பர்?

05. ஆண்டுதோறும் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றும் நிறுவனம் எது?

06. வசந்தகான சுபாவினைத் தோற்றுவித்தவர் யார்?

07. பபூன் பாத்திரம் இடம்பெறும் நாடக வகை யாது?

08. ஈழத்து இசை நாடக வரலாறு எனும் நூலை எழுதியவர் யார்?

09. அரங்க வெளிகள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக?

10. ஆக்கும் கலைகள் இரண்டை குறிப்பிடுக (12 x 1 = 12 புள்ளிகள்)

(02) அ) ஆற்றுகைக் கலைகள் மூன்று தருக?

ஆ) ஆற்றுகைக் கலைகளின் பண்புகள் நான்கு தருக?

இ) மேடை நாடகமானது, தொலைக்காட்சி நாடகம், இலக்கியம் ஆகிய கலைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(03) அ) நாடக நிலைப்பட்ட சமயச் சடங்குகள் மூன்றினை குறிப்பிடுக.

ஆ) நீர் மேலே குறிப்பிட்ட நாடகச் சடங்கில் இரண்டைக் குறிப்பிட்டு அச்சடங்கில் காணப்படும் நாடகப் பண்புகளைக் குறிப்பிடுக?

(3 + 9 = 12 புள்ளிகள்)

(04) அ) அரங்கப் பயிற்சி என்றால் என்ன?

ஆ) அரங்கப் பயிற்சிகளுக்கு உதாரணத்தை குறிப்பிடுக?

இ) நடிப்பு நுட்பங்களைக் கூறி அவை நடிகருக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(05) அ) கூத்து ஆடப்படும் பிரதேசங்களையும் அங்கு ஆடப்படும் கூத்துகளையும் பட்டியற்படுத்துக.

ஆ) மேலே நீர் கூறிய கூத்துகளில் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

(6 + 6 = 12 புள்ளிகள்)

(06) அ) புதிய தெரு வீடு நாடகத்தின் ஒரு கரு யாது

ஆ) புதிய தெரு வீடு நாடகத்தில் வரும் பாத்திரங்களை குறிப்பிடுக.

இ) மேலே குறிப்பிட்ட பாத்திரங்களில் இரண்டைக் குறிப்பிட்டு அப்பாத்திரங்களின் பண்புகளை குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

(07) பின்வரும் கலைஞர்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக

அ) நெறியாளர்

ஆ) தயாரிப்பாளர்

இ) பார்வையாளர்

(4 x 3 = 12 புள்ளிகள்)

www.ikedu.lk

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

முதலாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் : 11	பாடம் : தமிழ் இலக்கியநயம் I, II	நேரம் :- 3.00 மணித்தியாலம்

பெயர் / சுட்டெண் :.....

பகுதி I

❖ **வினாத்தாள் 1 இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதவும்.**

01) *01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.*

(01) ''தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோகம் புரிந்த தொரு வேளை தனிலே''

அ) சையோகம் என்பதன் கருத்து யாது?

……..

ஆ) இங்கு சையோகமாக இருந்தவை எவை?

……

(02) ''பெறல் அரும் திருப்பெற்று உதவிப் பெருந்திறன் நினைந்திலன்''

அ) இக் கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?

……..

ஆ) யாரைப் பற்றிக் கூறப்பட்டது?

……..

(03) ''வாழ்க்கை என்பது போராட்டம் இதில் வலிமையானவையே வாழும்''

அ) இக் கூற்றினைக் கூறியவர் யார்?

……..

ஆ) இக் கூற்றிற்கு முரணாக பத்தியாளர் கூறும் கருத்து யாது?

……..

(04)''குவளை உண்கண் குய்ப்புகை கழும''

அ)''கழும'' என்பதன் பொருள் யாது?

……..

ஆ)''குவளை உண்கண்'' என்ற தொடரில் நீர் காணும் நயத்தினை விளக்குக?

……..

(05) ''செஞ்சிலை மாரனும் கலகமே செய்யும் கண் இதுவாம் என மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்''

அ) செஞ்சிலை மாரன் என்று கூறப்படுபவன் யார்?

……..

ஆ) அவன் மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கக் காரணம் என்ன?

……..

(5 x 4 = 20 புள்ளிகள்)

www.ikeou.lk

02)

நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியாய் இல்லம் வேண்டும்
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்கு நொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்

வாசித்த வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்து, நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்ற தொண் டிழைப்பீர்! சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்

(அ) இக் கவிதையை யாத்த கவிஞரின் நோக்கம் யாது?

.....

.....

(04 புள்ளிகள்)

(ஆ) இங்கு நூலகம் எவ்வாறு அமைய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது

.....

.....

(04 புள்ளிகள்)

(இ) நூலகரின் பணிகளாகக் கூறப்படுபவை எவை?

.....

.....

.....

.....

(06 புள்ளிகள்)

(ஈ) நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும் மாசற்ற தொண்டிழைப்பீர. இப் பாடலடியின் சிறப்பினை விளக்குக.

.....

.....

.....

.....

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

www.ikedu.lk

அல்லது

❖ கீழ்காணும் உரைப்பகுதியை வாசித்து தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக.

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ அங்கே உரிமைப் போராட்டம் இல்லை, கடமைக்கு குறைவு இல்லை. அதனால் ''அன்பின் வழியது உயர் நிலை ''என்கின்றார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்கை பாலை நிலத்திலுள்ள பட்ட மரம் போன்றது என்றும் கூறுகின்றார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்ய வேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல் வரழ்கை ஒரு அறமென்று சிறப்பித்து இல்லறம் என்றார்கள். மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள். தேச பக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய குடும்பத்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். சமயம் அல்லது கடவுள்நெறி என்பதும் உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். ஆனால் குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பை தவறாகப் பயன்படுத்திக் கொண்ட தந்தையோ மக்களோ தன்னலம் உடையவர்களாய் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்? அப்படித்தான் நாட்டில் ஒரு சாராரின் அன்பை தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொரு சாரார் தன்னலமாக வாழ்வார்களானால் , அன்பு வரண்டு போகும் உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

(அ) இல்லறத்தின் அங்கங்கள் எவை?

……

……

(04 புள்ளிகள்)

(ஆ) அன்பு உயர்வழி எனக் குறிப்பிடப்படுவதன் காரணம் யாது?

……

……

(04 புள்ளிகள்)

(இ) உரிமைக்கும் கடமைக்கும் எவ்வாறு போராட்டம் ஏற்படுகின்றது?

……

……

……

(06 புள்ளிகள்)

(ஈ) அன்பின் முக்கியத்துவம் பற்றி பந்தியிலிருந்து எடுத்துக் காட்டுக?

……

……

……

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "





Contact

76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

பகுதி II

- **கவனிக்க.**
- **பகுதி II இல் *1* ஆம் வினாவுக்கும், ஏனைய *2, 3, 4, 5,* ஆகிய வினாக்களுள் எவையேனும் *02* வினாக்களுக்குமாக, மொத்தம் *03* வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
- **பகுதி II இன் புள்ளிகள் *60* ஆகும்.**

***01)* பின்வரும் கவிதையை வாசித்து, அதன்கீழ தரப்பட்டுள்ள தொடர்களின் வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயத்து குறைந்தபட்சம் *200* சொற்களில் எழுதுக.**

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலுக்கமழு தையா -இதில்,
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா -இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா -இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அழுத மையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா -இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே -இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அழுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா -இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா.

(அ) இக் கவிதை எழுந்த பின்னணி
(ஆ) கணவன் மேல் மனைவி கொண்ட அன்பு
(இ) மனைவியின் மீது கணவன் கொண்ட அன்பின் வெளிப்பாடு
(ஈ) குழந்தையால் தந்தை அடையும் இன்பம்
(உ) இக் கவிதையில் காணும் கவித்துவம்

(5 x 6 = 30 புள்ளிகள்)

❖ **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

02) காலந்தோறும் அகம் எனும் பாடப்பரப்பில்

(அ) தலைவன் -தலைவியரிடையிலான சிற்றின்பக்காதலும்,

(ஆ) இறைவன் மீது ஆன்மா கொண்ட பேரின்பக் காதலும், எடுத்துரைக்கப்பட்டிருக்கு மாற்றை விளக்குக. *(15 புள்ளிகள்)*

03) கானல் வரியில்

(அ) காவேரியின் வளம்

(ஆ) சோழ மன்னனின் ஆற்றல், என்பன வெளிப்படுமாற்றை விளக்குக. *(15 புள்ளிகள்)*

04) நலம் புனைந்துரைத்தல்அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு

(அ) தலைவியின் அழகு நலன்

(ஆ) அணிச்சிறப்பு என்பன வெளிப்படுமாற்றை விளக்குக. *(15 புள்ளிகள்)*

05) தாய்ப்பசு எனும் சிறு கதையில்

(அ) மனிதரின் சுய நலம்

(ஆ) பசுவின் ஜீவ காருண்யம் என்பன காட்டப்பட்டுள்ளவற்றை விபரிக்குக. *(15 புள்ளிகள்)*

www.lkedu.lk

JAFFNA HINDU COLLEGE

First Term Exam - 2023

Grade - 11	Appreciation of English Literary Texts	Time: - 3 Hours

Name/Index No: ……

- **Answer five questions only.**
- **Answer question one and four others and selecting one from each section Poetry, Drama, Phrase and Fiction.**
- **Hand writing should be readable**

Part-I

Section – A (answer all question)

I. Read the given extracts answer the questions given below.

But a caged bird stands on the grave of dreams.
His shadow shouts on a night mare scream.

a. In which work do these lines appear? Name the writer?
……

b. What is meant by grave of dreams?
……

c. Who is referred to as "his" in the second line?
……..

d. Name one literary device used in above lines? What effect is created?
……..
……..

II. In fine, we thought that he was everything
to make us wish that we were in his place.

a. From where are these lines taken? Who wrote them?
……..

b. Who is referred to as "we" in the first line? Who is referred to as "he" in the first line?
……..

c. Why did they want to be in his place?
……..

d. What theme of these two lines does it influence in its whole work?
……..
……..

www.ikedu.lk

III. It is not half as useful as logic, for it does not prove anything"

a. Name the work from which lines have been taken? Name the writer?

……..

b. Who is the speaker? What is referred to as "it"

……..

c. What is the attitude of the speaker towards it?

……..

d. What is the situation given here?

……..

……..

IV. A sudden look of terror, eyes wide open, mouth agape.

"He saw something behind me that I couldn't see"

a. From which text are these lines taken? Who wrote them?

……..

b. Whose behavior is described here?

……..

c. Who describes the situation? Where are they?

……..

d. What does the man's behavior indicate?

……..

……..

V. Weave the cloth , if you say you can't I'll leave you.

a) Where are these lines taken from? Who wrote it?

……..

b) Who speaks these words to whom?

……..

c) Why does the speaker want to weave the cloth?

……..

d) What aspects of the speaker's character are revealed by these words?

……..

……..

VI. But I shall be true till death and show him how I can live?

a) Which work has these lines taken? Who wrote it?

……..

b) Who speaks these words and about whom are these spoken?

……..

c) What is the attitude of the speaker?

……..

d) What kind of situation has made the speaker to say these words?

……..

……..

www.ikedu.lk

Section – B (answer question in either A or B)

A. Read the following passage and answer the given question.

It made him feel that he had been suddenly converted into an outsider; he didn't like the status and so here he found an opportunity to bring himself back into the fold. I didn't want to speak to you unnecessarily about it, but I'm so happy the boy still calls me "uncle" whenever he meets me; although he has travelled to the other end of the earth, he has not forgotten his uncle.

1. What is the situation given in the passage? Who is the speaker?
   ……..
   ……..
2. Why did the character "he" feel outsider?
   ……..
   ……..
3. Explain the following word/phrase
   a. Back into the fold……
   b. To the other end of the earth……
4. What are characteristics of He and Uncle revealed in the passage?
   ……..
   ……..
   ……..
   ……..
   ……..

Or

First I stood up and Tony paused briefly in his eating but when I stood still he went back to his bun and then I took one step back away from him and he didn't notice and another step , and then another, and another and Tony kept eating his bun. Then I turned around closed my eyes and ran.

1. What is the situation presented in the passage? Where does it take place?
   ……...
   ……...
2. Why the narrator is tip toeing?
   ……...
   ……...
3. Write the meaning of the following words
   a. Paused……
   b. Briefly……
4. What can be learnt, about the narrator and Tony's relationship with each other from the given passage?
   ……...
   ……...

www.ikeou.lk

Part-II

Poetry (Answer one question only)

1) "Every aspect of nature is equally beautiful" Keats has highlighted this idea in his poem "To the Nile" Do you agree?
2) Maya Angelou has voiced the oppressed feelings of unprivileged people in her poem, "I know why the caged bird sings". Discuss.
3) The poem war is kind by Stephen crane discusses the pomp of war created by war mongers and the horror it actually create. Discuss.
4) "Appearance is not always true, it can be deceptive" How does the poet support this concept in the poem "Richard Cory"? Comment.

Prose (Answer one question only)

5) "The Lahore Attack" is about standing as one united nation through cricket" Would you agree with this statement explain?
6) There are moments in the prose "Wave" that reflect examples of how humans face unexpected natural disasters both positively and negatively .Discuss with examples from the text.
7) True love is formed on sacrifice. Do you agree? Write with close reference to the prose: The Nightingale and the Rose.
8) Nicholas is not fault for his conduct in the short story "The Lumber Room". Comment with examples from the text.

Drama (Answer one question only)

9) In the play Twilight of a Crane Yohyo's greediness destroys the happiness of his family as well as natural balance. Discuss this statement.
10) "Violence and love are juxtaposed at the end of the play" Comment on this, in relation to the play "The Bear".

Novel (Answer one question only).

11) Analyze with examples from the novel, the relationship among Jagan, Mali and Cousin in the vendor of sweet (Up to chapter 06)
12) The importance of justice is one of the major themes in the prince and the pauper by Mark Twain. Comment.

www.ikedu.lk

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

முதலாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் : 11	பாடம் : வணிகமும் கணக்கீட்டு கல்வியும் I	நேரம் :- 3.00 மணித்தியாலம்

பெயர் / சுட்டெண் :.....

- ❖ **குறிப்பு**
- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ ***1 – 40 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 ஆகிய விடைகளுள் சரியான விடையை தெரிவு செய்க.***
- ❖ **பின்வரும் சம்பவத்தை அவதானித்து *1* தொடக்கம் *5* வரையான வினாக்களுக்கு விடை தருக.**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா மொபிட்டல் கம்பனி தனது வாடிக்கையாளர்கள் தங்கள் பட்டியல் கொடுப்பனவுகளை ஒன்லைனில் செலுத்துவதற்கும், இணையம் மூலம் வேறு சில தேவையான சேவைகளைப் பெறுவதற்கும் வசதிகளை வழங்கியுள்ளது. மற்றும் வணிக வங்கி தனது வாடிக்கையாளர்கள் தங்கள் பரிவர்த்தனைகளை கையடக்கத் தொலைபேசி மூலம் வங்கியின் இணையத்தளங்களுடன் இணையும் வகையில் வசதிகளை வழங்கியுள்ளது.

01) வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா மொபிட்டல் கம்பனியினால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவை யாது?
(01) உணவு *(02)* போக்குவரத்து *(03)* தொடர்பாடல் *(04)* பொழுதுபோக்கு

02) வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா மொபிட்டல் கம்பனி ஒரு.
(01) பொருள் உற்பத்தி வணிகமாகும். *(02)* சேவை வழங்கும் வணிகமாகும்.
(03) தனியுடமை வணிகமாகும். *(04)* இலாப நோக்கமற்ற வணிகமாகும்.

03) ஸ்ரீலங்கா மொபிட்டல் கம்பனி ஒரு வணிக அமைப்பு எனும் வகையுடன் தொடர்புடைய ஒரு பண்பு.
(01) வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பு *(02)* சட்ட ஆளுமை உடையது.
